**சுருக்கம்**

தொழில்நுட்பக் கல்வி இயக்ககம் – தேர்வு வாரியம் மூலம் வருடத்திற்கு இரண்டு முறை நடத்தப்படும் கணினி அலுவலகத் தானியக்கச் சான்றிதழ் (Certificate Course in Computer on Office Automation) தேர்விற்குரிய விண்ணப்பம், தேர்வுக் கட்டணம் மற்றும் பயிற்சிக்கட்டணத்தை உயர்த்தியும் மற்றும் இத்தேர்வு குறித்த விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளில் வரிசை எண் 3ல் திருத்தம் செய்தும் ஆணை வெளியிடப்படுகிறது.

---

**உயர்கல்வித்(பி1) துறை**

அரசாணை (நிலை) எண். 82 நாள் 17.03.2023

ஸ்ரீ சுபகிருது வருடம், பங்குனி –3

திருவள்ளுவர் ஆண்டு 2054

**படிக்கப்பட்டது:-**

1. அரசாணை (நிலை) எண்.47, உயர்கல்வி(பி1)த் துறை, நாள் 20.02.2002.
2. அரசாணை (நிலை) எண்.190, உயர்கல்வி(பி1)த் துறை, நாள் 16.12.2020.
3. தொழில்நுட்பக் கல்வி ஆணையரின் கடித எண் .114300 / க்யூ 3/ 2022, நாள் 25.07.2022.

*****

**ஆணை:-**

கணினி அலுவலகத் தானியக்கச் சான்றிதழ் (Certificate Course in Computer on Office Automation) படிப்பு குறித்து விதிகள், ஒழுங்குமுறைகள் மற்றும் பாடத்திட்டத்திற்கு ஒப்புதல் வழங்கி மேலே ஒன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் ஆணை வெளியிடப்பட்டது.

2. மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், தொழில்நுட்பக் கல்வி இயக்ககத்தில் தேர்வு வாரியம் மூலம் நடத்தப்படும் Certificate Course in Computer on Office Automation தேர்வுகள் வருடத்திற்கு இரண்டு முறை ஏப்ரல் / மே மற்றும் நவம்பர் / டிசம்பர் மாதங்களில் நடத்தப்பட்டு வந்ததாகவும், அரசு வணிகவியல் தேர்வுகள் வருடத்திற்கு இரண்டு முறை பிப்ரவரி மற்றும் ஆகஸ்டு மாதங்களில் நடத்தப்பட்டு வருவதால், அதன் அடிப்படையில் இக்கணினி

அலுவலகத் தானியக்கச் சான்றிதழ் தேர்வினையும் பிப்ரவரி மற்றும் ஆகஸ்டு மாதங்களிலேயே நடத்துவதற்கு மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் ஆணை வெளியிடப்பட்டது எனவும், மேலே ஒன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் வரிசை எண் 9-ல் மாணாக்கர்களிடமிருந்து வசூலிக்கப்படும் தேர்விற்கான கட்டணம் ரூ.500/- என்றும், வரிசை எண் 12-ல் விண்ணப்பக் கட்டணம் ரூ.15/- மற்றும் வரிசை எண் 15-ல் பாடத்திட்டத்திற்கான கட்டணமாக ரூ.15/- என்று குறிப்பிட்டு அரசாணை வெளியிடப்பட்டுள்ளது எனவும், அவ்வரசாணையில், மேற்காணும் கட்டணத்தொகையை மூன்று வருடங்களுக்கு ஒரு முறை சூழ்நிலைக்கேற்றவாறு மாற்றியமைக்கலாம் என்று வரிசை எண்-9-ல் தெரிவிக்கப்பட்டுள்ளது என்றும், மேலும், அரசு அங்கீகாரம் பெற்ற தட்டச்சு பயிலகம், அரசு மற்றும் அரசு உதவி பெறும் பாலிடெக்னிக் கல்லூரி மற்றும் சுயநிதி பாலிடெக்னிக் கல்லூரியில் COA தேர்வு தொடர்பாக 120 மணி நேரங்கள் பயிற்சி பெற பயிற்சி கட்டணமாக ரூ. 2000/- தொகை பெற்று பயிற்சி அளிக்க அனுமதி வழங்கி அரசாணை பெறப்பட்டுள்ளது எனவும், அவ்வரசாணை வெளியிடப்பட்டு 20 ஆண்டுகள் கடந்த நிலையில், இதுநாள் வரை மேற்காணும் தேர்விற்கான மற்றும் பயிற்சிக்கான கட்டணங்கள் உயர்த்தாமல் அரசாணையில் குறிப்பிட்டுள்ளவாறு கட்டணங்கள் வசூலிக்கப்பட்டு "சுய சார்பு" (Self supporting basis) அடிப்படையில் தேர்வுகள் நடத்தப்பட்டு வருகின்றன எனவும் தொழில்நுட்பக் கல்வி ஆணையர் தெரிவித்துள்ளார்.

3. மேலும், மேற்படி தேர்விற்காக விண்ணப்பிக்கும் மாணாக்கர்களின் எண்ணிக்கை ஒவ்வொரு தேர்விற்கும் மூன்று மடங்காக அதிகரித்து வருவதால், கட்டணம் நிர்ணயிக்கப்பட்டு 20 ஆண்டுகள் கடந்த நிலையில். தற்போதைய விலைவாசிக்கு ஏற்றவாறு தேர்வு நடத்துவதற்கான செலவினங்களும் அதிகரித்து வருவதால், மேற்காணும் தேர்வுக்கான கட்டணத்தை 100% உயர்த்தியும் மற்றும் பயிற்சி கட்டணத்தை 50% உயர்த்தியும் பின்வரும் அட்டவணைப்படி கட்டணங்களை உயர்த்தி ஆணை வெளியிடுமாறு தொழில்நுட்பக் கல்வி ஆணையர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்:-

| விவரம் | அரசாணையின்படி தற்பொழுது பெறப்படும் கட்டணத் தொகை | கட்டணத் தொகை 100% / 50% உயர்த்தி வழங்கக் கோருதல் |
|---|---|---|
| விண்ணப்பக் கட்டணம் | ரூ.15/- | ரூ.30/- |
| தேர்வுக் கட்டணம் | ரூ.500/- | ரூ.1000/- |
| பயிற்சிக் கட்டணம் (120 மணி நேரம் ) | ரூ.2000/- | ரூ.3000/- |

4. மேலும், Certificate Course in Computer on Office Automation தேர்வு குறித்து விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகள் வெளியிடப்பட்ட மேலே

ஒன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் பத்தி 1-ல் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளதாக தொழில்நுட்பக் கல்வி ஆணையர் தெரிவித்துள்ளார்:-

"The Typewriting Institutes / Government / Government Aided / Self Financing Polytechnics wherever facilities available are proposed to be permitted to give training to the students. Private candidates will also be admitted to the examination as in the case of Typewriting examinations".

ஆனால், அவ்வரசாணையில் ஒப்புதல் அளிக்கப்பட்ட விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளில் (Rules and Regulation) வரிசை எண் 3-ல் Duration of the Course-ல் கீழ்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளதாக தொழில்நுட்பக் கல்வி ஆணையர் தெரிவித்துள்ளார்:-

"A Candidate has to undergo minimum of 120 hours of Training at the recognised Typewriting Institutes and Government / Government Aided / Self Financing Polytechnics"

இது ஒன்றுக்கொன்று முரண்பாடானதாக உள்ளதாக தொழில்நுட்பக் கல்வி ஆணையர் தெரிவித்துள்ளார்.

5. மேற்காணும் விவரங்களின் அடிப்படையில், மேலே பத்தி 3ல் குறிப்பிடப்பட்டுள்ளபடி கட்டணத் தொகைகளை உயர்வு செய்து ஆணை வழங்குமாறும் மற்றும் விதிகள் மற்றும் ஒழுங்குமுறையில் வரிசை எண். 3-ல் பின்வருமாறு திருத்தம் செய்து ஆணை வெளியிடுமாறும் தொழில்நுட்பக் கல்வி ஆணையர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

**Duration of the Course**

**"An Institute Candidates has to undergo minimum of 120 hours of Training at the recognised Typewriting Institutes and Government / Government Aided / Self financing Polytechnics and a Private Candidates has to give a declaration stating of 120 hours trained by self "**

6. தொழில்நுட்பக் கல்வி ஆணையரின் கருத்துருவினை அரசு கவனமுடன் ஆய்வு செய்து, கணினி அலுவலகத் தானியக்கச் சான்றிதழ் (Certificate course in Computer on Office Automation) தேர்வுக்கான விண்ணப்பம் மற்றும் தேர்வுக் கட்டணத்தை 100% உயர்த்தியும் மற்றும் பயிற்சிக் கட்டணத்தை 50% உயர்த்தியும் பின்வரும் அட்டவணைப்படி கட்டணங்களை நிர்ணயம் செய்து ஆணையிடுகிறது:-

| விவரம் | அரசாணையின்படி தற்பொழுது பெறப்படும் கட்டணத் தொகை | கட்டணத் தொகை உயர்த்துதல் |
|---|---|---|
| விண்ணப்பக் கட்டணம் | ரூ.15/- | ரூ.30/- |
| தேர்வுக் கட்டணம் | ரூ.500/- | ரூ.1000/- |
| பயிற்சிக் கட்டணம் (120 மணி நேரம் ) | ரூ.2000/- | ரூ.3000/- |

7. மேலும், மேலே ஒன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் Certificate course in Computer on Office Automation தொடர்பாக ஒப்புதல் அளிக்கப்பட்ட விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளில் வரிசை எண். 3-ல் ஏற்கனவே உள்ளவற்றிற்கு பதிலாக பின்வருமாறு திருத்தம் செய்து அரசு ஆணையிடுகிறது:-

**Duration of the Course**

**"An Institute Candidates has to undergo minimum of 120 hours of Training at the recognised Typewriting Institutes and Government / Government Aided / Self financing Polytechnics and a Private Candidates has to give a declaration stating of 120 hours trained by self "**

8. இவ்வாணை நிதித் துறையின் அ.சா.கு.எண். 54253 / (கல்வி-I) / 2022, நாள் 12.01.2023-ல் பெறப்பட்ட ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

தா.கார்த்திகேயன்
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்

தொழில்நுட்பக் கல்வி இயக்குநர், சென்னை.25.
மாநிலக் கணக்காயர், சென்னை-18.
சம்பளக்கணக்கு அலுவலர் (தெற்கு), சென்னை.35.
இயக்குநர், கல்லூரிக்கல்வி இயக்ககம், சென்னை-15.
இயக்குநர், பள்ளிக்கல்வி இயக்ககம், சென்னை-6.
இயக்குநர், அரசு தேர்வுகள் , சென்னை-6.

<u>நகல்</u>

உயர்கல்வித்துறை அமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை-9.
உயர்கல்வித்துறை முதன்மைச் செயலாளரின் தனிச் செயலர், சென்னை-9.
நிதித் (கல்வி-1)த்துறை, சென்னை – 9.
மனிதவள மேலாண்மைத் துறை, சென்னை-9
இகோ/உதிரி,

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

17.3.2023
பிரிவு அலுவலர்.

23
17/3/23